



Metro லீடர்

# மெட்ரோ LEADER

தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'






லீடர்: 05 இதழ்: 289 22.02.2025 பக்கங்கள்:08 editorml21@gmail.com விலை:75/-


# சபாநாயகரே பொறுப்பு




## தயாசிறி எம்.பி குற்றச்சாட்டு

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்டால், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாவலராக சபாநாயகரே அதனை பொறுப்பேற்க வேண்டும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஜெயசேகர, பாதாள உலகக் குற்றவாளி கணேமுல்ல சஞ்சீவவின் கொலை 02

## தாய் மொழியில் அரச சேவைகளை பெற்றுக்கொள்ளும் கட்டமைப்பு உருவாக்கப்படும்

### பிரதி அமைச்சர் முனீர் முளப்பர்



அரசியல் நிலைமை மற்றும் மொழி ரீதியான பிரச்சினைகள் காரணமாகவே இந்த நாட்டின் இனங்களுக்கு இடையில் சகவாழ்வு இல்லாமல் போயுள்ளது. எனவே முதலில் இனவாதம் அற்ற நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். 02

## டிஜிட்டல் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானம்



அரசாங்கத்தின் டிஜிட்டல் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து சகல பாராளுமன்ற உறுப்பினர்களையும் தெளிவுபடுத்தும் செயலமர்வொன்றை எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதி நடத்துவதற்கு டிஜிட்டல் பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. 02

## எம்.பிக்களின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு குறைந்த வாடகை வசூலிப்பு



02

## பாணின் விலை குறைப்பு



பாண் இறாத்தலின் விலையை 10 ரூபாவால் குறைப்பதற்கு பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

## சபாநாயகரே பொறுப்பு....

மேற்கோற்காட்டி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற வேளை, காவல்துறை மற்றும் சிறப்பு அதிரடிப்படை (STF) அதிகாரிகள் ஏன் எதுவும் செய்யவில்லை என்று கேள்வி எழுப்பிய பாராளுமன்ற உறுப்பினர், உள்ளிருந்து வரும் உதவி குறித்து சந்தேகங்களை எழுந்துள்ளதாகவும், இது குறித்து விசாரிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு, இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் இலங்கையின் தேசிய பாதுகாப்பை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கம் சமீபத்தில் பாதாள உலக நடவடிக்கைகள் குறித்த பிரச்சினையை தீர்ப்பதாக கூறிய நிலையில், கடந்த 4 போயா நாட்களுக்குள் மொத்தம் 13 துப்பாக்கிச் சூடு சம்பவங்களும், இரண்டு அப்பாவி குழந்தைகள் உட்பட 12 இறப்புகளும் பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில், தேசிய பாதுகாப்பு தொடர்பாக எந்தப் பிரச்சினையும் இல்லை என்று அரசாங்கம் இன்னும் கூறி வருவதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியுள்ளார்.
அத்துடன், நீதிபதிகளுக்கான பாதுகாப்பை நீக்குவதாக அறிவிக்கும் சுற்றறிக்கையை எடுத்துக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக நீதிபதிகள் எவ்வாறு தீர்ப்புகளை வழங்குவார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த நிலையில், தற்போதைய சூழ்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் அபாயங்களையும் சுட்டிக்காட்டிய தயாசிறி ஜெயசேகர, பாராளுமன்ற உறுப்பினர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் சபாநாயகரே பொறுப்பு என கூறியுள்ளார்.

மேலும், தாங்கள் பாதுகாப்பை கோரவில்லை, ஆனால் மற்றவர்களால் சுட்டுக் கொல்லப்பட தாங்கள் தயாராக இல்லை எனவும் இந்த சூழ்நிலையை அரசாங்கம் தீவிரமாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

## தாய் மொழியில்.....

அதன் ஊடாக ஒவ்வொரு பிரஜையும் தனது தாய் மொழியில் அரச சேவையை பெற்றுக்கொள்ளும் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என தேசிய ஒருமைப்பாட்டு பிரதியமைச்சர் முஹம்மத் முனீர் முளப்பர் தெரிவித்தார்.

சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு நேற்று வெள்ளிக்கிழமை (21) மாகும்புர, பன்னிபிட்டியவில் உள்ள தேசிய கல்வி மொழி மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வெள்ளிக்கிழமை (22) சர்வதேச தாய்மொழி தினமாகும்.1999 இல் யுனெஸ் நிறுவனம் இந்த தாய் மொழி தினத்தை பிரகடனப்படுத்தியது. 1947 ஆம் ஆண்டு எமது அயல்நாடு இந்தியா சுதந்திரம் அடைந்தது. அதன் பின்னர் பாகிஸ்தான் என்ற நாடு வடக்கு பாகிஸ்தான், தெற்கு பாகிஸ்தான் என பிரிந்தது. தெற்கு பாகிஸ்தான் வங்களாதேசமாக மாறியது. அங்கு வங்காள மொழி பிரதானமாக காணப்பட்டது. பாகிஸ்தான் உருது மொழியை பிரதான மொழியாக அறிவித்தது. எனினும் அங்கிருந்த மக்கள் தமது உரிமை பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டு தமது தாய் மொழியை பெற்றுக்கொண்டார்கள்.

எமது நாடும் மொழி காரணமாக இரத்தம் சிந்தியது. மொழிக்காக பல போராட்டங்கள் இந்த நாட்டில் இடம்பெற்றுள்ளன. மொழி என்பது உரிமை. தமக்கான மொழியில் செயலாற்றுவதற்கான உரிமை இங்கு காணப்பட வேண்டும்.

நான் தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சராக பதவியேற்றதன் பின்னர் இந்த நாட்டில் இனங்களுக்கு இடையில் சமாதானம், சகவாழ்வு இல்லாமல் போனாமைக்கான காரணங்களை ஆய்வு செய்த நிறுவனமொன்றின் அறிக்கைகளை பார்வையிட கிடைத்தது. அதில் முதல் காரணியாக அரசியல் நிலைமைகள் உள்ளன. இரண்டாவதாக மொழி ரீதியான பிரச்சினைகள் காணப்படுகின்றன.

நாட்டின் பிரஜைகள் எந்தவொரு அரச சேவையை பெற்றுக் கொள்ள முற்படும் போது தனது தாய் மொழியில் சேவையை பெற்றுக் கொள்வதற்கான சூழலை உருவாக்க வேண்டும்.

எனினும் துரதிஷ்டவசமாக சுதந்திரம் அடைந்து 77 வருடங்கள் கடந்தும், குறிப்பாக இந்தியா- இலங்கை உடன்படிக்கையில் கூட தமிழ் மொழியை ஏற்றுக் கொண்ட போதும் அரச திணைக்களங்களில் தமது தாய்மொழியில் சேவைகளை பெற முடியாத நிலை உள்ளது.

எனவே இந்த நாட்டில் மீண்டும் இனவாதம் தோற்றம் பெறக்கூடாது. இனவாதம் அற்ற நாடே எதிர்காலத்தில் கட்டியெழுப்ப வேண்டும்.

எதிர்காலத்தில் அரசாங்கத்தின் ஊடாக மக்களுக்கு அரச சேவைகளை அரச திணைக்களங்களில் தமது தாய் மொழியில் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும் என்றார்.

## டிஜிட்டல் பொருளாதார.....

குறித்த குழு டிஜிட்டல் பொருளாதார அமைச்சர் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அவர்களின் தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவும் கலந்துகொண்டார்.

இங்கு டிஜிட்டல் பொருளாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவிருக்கும் பகுதிகள் குறித்து டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் அதிகாரிகள் கருத்துக்களை முன்வைத்தனர்.

அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாட்டின் முன்னணியாளரான ICTA நிறுவனத்தை டிஜிட்டல் பொருளாதார அதிகார சபையின் கீழ் கொண்டுவந்து, வினைத்திறனான முறையில் அதன் சேவைகளைப் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமைச்சின் அதிகாரிகள் குழுவில் சுட்டிக்காட்டினர்.

மேலும், அரசாங்க நிறுவனங்கள் பல்வேறு நிறுவனங்களைப் பயன்படுத்தி அவற்றின் ஊடாக தங்கள் தரவுகளையும், தகவல்களையும் சேகரிப்பதற்கு வெவ்வேறுபட்ட தளங்களை உருவாக்கியிருப்பதாகவும், அவற்றை எதிர்காலத்தில் ஒரு நிறுவனத்தின் கீழ் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

இதுபோன்ற கட்டமைப்புக்கள் அரசாங்கத்தின் மேற்பார்வையின் கீழ் உருவாக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறான கட்டமைப்புக்களைத் தற்பொழுது உருவாக்க வேண்டாம் என்றும் அமைச்சுக்களின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாகத் தெரிவித்தார்.

ஒவ்வொரு நிறுவனத்திற்கும் காணப்படும் தேவைகளைப் புரிந்துகொண்டு அவற்றுக்கு ஏற்ற வகையில் அக்கட்டமைப்புக்களை உருவாக்கி பராமரிக்கப்படுவது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார்.
அத்துடன், நாட்டின் சில பகுதிகளில் தொலைபேசி சமிக்ஞைகளில் காணப்படும் குறைபாடுகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

கிராமத்திற்குத் தொடர்பாடல் என்ற திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் 50 புதிய தொடர்பாடல் கோபுரங்கள் அமைக்கப்படவிருப்பதாகவும், இதன் ஊடாக இந்தப் பிரச்சினையைக் குறிப்பிட்டளவு தீர்க்க முடியும் என்றும் அமைச்சின் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.
இந்தக் கலந்துரையாடலில் க்ரிப்டோ பணத்தின் (crypto) பயன்பாடு குறித்து கருத்துத் தெரிவிக்கப்பட்டதுடன், இலங்கைக்குள் அவற்றின் பயன்பாட்டுக்கு இடமளிப்பதா? இல்லையா? என்பதை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் வழங்கும் பரிந்துரையின் அடிப்படையில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், இலங்கை பிரஜைகளின் தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களை எவ்வாறு கையாள்வது மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் உள்ளவர்களின் சம்பளங்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## எம்.பிக்களின் உத்தியோகபூர்வ...

மாதிவெலயிலுள்ள எம்.பிக்களின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு அண்மைக்காலமாக குறைந்த வாடகை வசூலிக்கப்படுவதால், அரசாங்கத்துக்கு ஆண்டுதோறும் பாரிய இழப்பு ஏற்பட்டு வருவதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையுடன் ஒப்பிடும்போது வீட்டு வாடகைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் பல கட்சிகள் அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டியுள்ளன.

இழப்பை ஈடுகட்ட, இந்த வீடுகள் ஒவ்வொன்றுக்கும் குறைந்தது 15,000 அல்லது 20,000 ரூபா வசூலிக்கப்பட வேண்டும் என்றும் அத்தரப்பினர் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'
Metro Media Network
502, Main Street, Sainthamaruthu- 14.
Sri Lanka.
Ads: 0779007738
News: 0772539298
Circulation: 0766735454

# புதிய வகை கொரோனா வைரஸ் சீனாவில் கண்டுபிடிப்பு




புதிய வகை வெளவால் கொரோனா வைரஸ்-ஐ சீன குழு ஒன்று கண்டுபிடித்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. கோவிட் 19 போன்றே இந்த புதிய வைரஸூம் விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு பரவும் அபாயம் கொண்டிருக்கிறது.

நச்சுயிரியல் வல்லுநரான ஷி ஷெங்லி தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட ஆய்வில் புதிய வகை வைரஸ் பற்றிய தகவல்கள் வெளியாகி உள்ளது.

வெளவால் கொரோனா வைரஸ்கள் குறித்து ஷி ஷெங்லி மேற்கொண்ட ஆய்வுகளில் வூஹான் பல்கலைக்கழகம் மற்றும் வூஹான் நச்சுயிரியல் மையத்தின் கீழ் இயங்கும் ஆங்கு ஆய்வகம் மற்றும் ஆங்கு அறிவியல் மைய ஆராய்ச்சியாளர்கள் பணியாற்றி உள்ளனர்.

புதிய வகை கொரோனா வைரஸ் எச்.கே.யு.5 (HKU5) என அழைக்கப்படுகிறது. இந்த வைரஸ் ஜப்பானை சேர்ந்த பிபிஸ்ட்ரெல் வகை வெளவால்களில் காணப்பட்டது. இந்த வைரஸூம் மனிதர்களின் சுவாச மண்டலத்தை பாதிக்கும் தன்மை கொண்டுள்ளது. இதுவும் இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தும் ACE 2, அதாவது முந்தைய சார்ஸ்-கோவி-2 வைரஸ் போன்ற பாதிப்பை ஏற்படுத்துகிறது.

“வெளவால் ACE 2 மட்டுமின்றி மனித ACE 2 மற்றும் வெவ்வேறு இனங்களின் மரபணுக்களை பாதிக்கும் ACE 2 வகையை சேர்ந்த



HKU5-CoV-I கண்டுபிடித்திருப்பதை அறிவிக்கிறோம்” என சீன குழு இதழ் ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்த வைரஸை வெளவால்களில் இருந்து தனிமைப்படுத்தினால், அவை மனிதர்களிடத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த வைரஸ் மனிதர்களுக்கு சுவாசம் மற்றும் குடல் உறுப்புகளில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் தன்மை கொண்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று உருவானது எப்படி என்பது தொடர்பாக உறுதியான தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. எனினும், சீன ஆய்வகத்தில் இருந்து தான் இந்த வைரஸ் பரவியதாக உலகளவில் நம்பப்படுகிறது. இதுதவிர கொரோனா வைரஸ் வெளவால்களில் இருந்து தான் மனிதர்களுக்கு பரவியதாகவும் கூறப்படுகிறது.

## இலங்கை மீண்டும் பயங்கரவாத நாடாக மாறப் போகிறதா?

இலங்கையில் சேகுவரா இயக்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் என பல்வேறு பட்ட அமுக்க குழுக்கள் அரசிற்கு எதிராக தோற்றம் பெற்று செயற்பட்டு பல்வேறு புத்திஜீவிகள், அரசியல் தலைவர்களை கொன்றளித்ததுடன் சொத்துக்கள், உடமைகள் போன்றவற்றை சேதமாக்கி அபிவிருத்தியையும் பின்னடைய செய்ததை நாம் மறந்து விடவில்லை. அவை பெரும் வரலாறுகளாகவும், வடுக்களாகவும் காணப்படுகின்றன.

நாட்டில் தலை தூக்கிய பயங்கரவாத இயக்கங்கள் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் இல்லாமல் செய்யப்பட்டு நாட்டை ஒரு ஸ்திரத்தன்மையுடன் அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மீண்டும் நாட்டில் துப்பாக்கி சூட்டு கலாசாரம் உருவாகி வருவது கவலைக்குரிய விடயமாக பார்க்கப்படும் இதேவேளை மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு பயங்கரவாத சூழலை நோக்கி நாடு நகர்கின்றதா என்ற அச்சமும் உருவாகி வருகின்றது. இதற்கு காரணம் கடந்த சில வாரங்களில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவங்களை உதாரணமாக கொள்ளலாம். ஏனெனில் பாதுகாப்பு வலயமாக காணப்பட்ட நீதிமன்றங்களில் இடம் பெற்ற துப்பாக்கி சூடு பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் ஏற்படலாம் என்பதை கருத்தில் கொண்டு 15 இயங்கங்களை தடை செய்து வர்த்தமானி நேற்று வெளியாகியுள்ளது. இந்த விடயம் வரவேற்கத்தக்கது. இலங்கையிலுள்ள இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் பயங்கரவாதிகளின் செயலால் நாடு பாதிப்படைந்ததை அறிந்திருக்க மாட்டார்கள். தற்போது அவர்கள் சுதந்திரமான சூழலில் பழக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

இலங்கையில் பயங்கரவாதம் இல்லாமல் செய்யப்பட்ட போது துப்பாக்கிகள் தனி நபர்களிடம் எவ்வாறு வந்தது என்பது குறித்து கண்டுபிடிக்கப்பட வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

நாட்டில் மீண்டும் ஒரு பயங்கரவாத சூழல் உருவாகுவதை எவரும் அனுமதிக்க மாட்டார்கள்.

editorml21@gmail.com

## அமெரிக்கா வங்குரோத்து நிலைக்குச் சென்றுவிடும் -எலான் மஸ்க் எச்சரிக்கை



அமெரிக்காவில் வரிப் பணம் செலவிடுதல் மற்றும் வர்த்தகப் பற்றாக்குறை ஆகியவற்றின் அதிகரிப்பால் அமெரிக்கா வங்குரோத்து நிலைக்குச் சென்றுவிடும் என எலான் மஸ்க் எச்சரிக்கை தெரிவித்து உள்ளார்.

இதன்படி, ட்ரம்பின் அரசில், அரசாங்க திறனுக்கான துறையின் தலைவரான எலான் மஸ்க் ஊடகத்திற்கு அளித்துள்ள பேட்டியில், 2 ட்ரில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தக பற்றாக்குறையானது, முந்தின அரசிடம் இருந்து, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு வந்து சேர்ந்துள்ளது.

இந்த பற்றாக்குறையை கட்டுக்குள் கொண்டு வர வேண்டும். அப்படி செய்யத் தவறினால், அமெரிக்காவங்குரோத்து நிலைக்குச் சென்று விடும். மக்களின் வரிப்பணம் மோசம் வாய்ந்த வகையில் செலவிடப்படுகிறது. ஒட்டுமொத்தத்தில், பற்றாக்குறையில் இருந்து ட்ரில்லியன் டொலர்களை வெளியே எடுக்க வேண்டும் என்பதே இலக்கு. இது மக்கள் புரிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயம்.

ஒரு தனிநபருக்கும் நாட்டுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. தனிநபர் அதிகம் செலவிடும் போது அவர் வங்குரோத்து நிலைக்குச் சென்று விடுகிறார். நாட்டுக்கும் இதுவே பொருந்தும்.

பெரிய அளவிலான வீணடிப்பு மோசடி மற்றும் முறைகேடு ஆகியவை தொடர்ந்து நடந்து. ஆண்டுக்கு 2 ட்ரில்லியன் அமெரிக்க டொலர் பற்றாக்குறைக்கு வழிவகுத்து விட்டது என்று கூறியுள்ளார்.

## கனடா விமான விபத்தில் 3 பேர் படுகாயம்

கனடாவின் டொரன்டோ விமான நிலையத்தில் விமானமொன்று தரையிறங்கிய போது திடீரென கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் 3 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை குறித்த விமானத்தில் 4 பணியாளர்கள் உட்பட 80 பயணிகள் பயணித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், விபத்துக்குள்ளான விமானத்தை அங்கிருந்து அப்புறப்படுத்தி ஓடுபாதையை மீண்டும் செயற்பாட்டுக்கு கொண்டு வரும் பணி நடைபெற்று வருகிறது. கனடாவில் பல்வேறு பகுதிகளில் தற்போது கடும் பனிப்புயல் வீசி வருவதால் விமானம் கட்டுப்பாட்டை இழந்து இருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

EAST லீடர்

# அம்பாரை காரைதீவில் வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்




எஸ்.அஷ்ரப்கான்

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்கோரி கவனயீர்ப்புப் போராட்டமொன்றினை வியாழக்கிழமை முன்னெடுத்திருந்தனர். குறித்த போராட்டமானது, அம்பாறை மாவட்டம், காரைதீவு சந்திக்கருகாமையில் ஆரம்பமானதுடன், பல்வேறு சுலோகங்களை ஏந்தி பட்டதாரிகள் கொளுத்தும் வெயிலில் கவனயீர்ப்புப் போராட்டத்தை அமைதியாக முன்னெடுத்தனர்.
இதன் போது, இதுவரை வேலைவாய்ப்பு தொடர்பில் எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லையெனவும் வெளிப்படையாக பட்டதாரிகளின் நிலைமை குறித்து தகவல்களை வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டவர்கள் தெரிவித்தனர்.

இக்கவனயீர்ப்புப் போராட்டமானது அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க உப தலைவர் சதாசிவம் யாதுராஜ் தலைமையில் இடம்பெற்றதுடன், குறித்த போராட்டத்திற்கு ஆதரவாக ஏனைய வேலையற்ற பட்டதாரிகள் தமது தொழில் உரிமையினை வலியுறுத்தும் வகையிலான பல்வேறு கோசங்களையும் எழுப்பி உரிய தரப்பினர் தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, குறித்த போராட்டம் இடம் பெற்ற இடத்திற்கு காரைதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எஸ்.ஜெகத் வருகை தந்து பார்வையிட்டதுடன், பொலிசார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மீட்பு மற்றும் உயிர் காப்பு தொடர்பான பயிற்சி





தில்சாத் பர்வீஸ்

மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காற்றல் தொடர்பான பயிற்சி நெறியொன்று அம்பாறை பொலிஸ் நிலைய அதிகாரி வி.எஸ்.எம். சதாத் தலைமையில் மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காற்றல் அதிகாரிகளான தரிந்து, சந்தன, புத்திக, குமார, வீரசிங்க உள்ளிட்ட குழுவினரினால் சுமார் 30 தொடக்கம் 40 வரையான தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இடம் பெற்றது.
அம்பாறை குளத்தில் நடைபெற்ற இப்பயிற்சியின் போது படகு பயிற்சி நீர்பரப்புகளில் உயிர்காப்பு நடவடிக்கைகள் செய்வதற்கான சிறப்பான முறைகள், பாதுகாப்பு உபகரணங்கள், மீட்பு முறைகள், மற்றும் அவசர சூழ்நிலைகளில் மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டது.

# “கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத் திட்டம்



எஸ்.அஷ்ரப்கான்

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சமூக ரீதியான, சுற்றாடல் ரீதியான, மற்றும் ஒழுக்க விழுமிய ரீதியிலான “கிளீன் ஸ்ரீலங்கா” எனும் வேலைத் திட்டத்திற்கமைவாக குறித்த திட்டத்தின் செயல்களை முன்னெடுப்போம், பொறுப்புடன் செயற்படுவோம், சூழல் நேய பாடசாலையிலிருந்து எதிர்கால பசுமைத் தலைவர்களை உருவாக்குவோம், பல்வகைமையை மதிக்கின்ற மகிழ்ச்சிக்குரிய வகுப்பறை, செயல்களில் நியாயத்தன்மை மற்றும் ஒவ்வொரு தீர்மானத்திலும் வெளிப்படைத் தன்மை மூலம் நம்பிக்கையை கட்டியெழுப்புதல் எனும் தொனிப்பொருள்களுக்கேற்ப அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் இணைந்து சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.ஜி.முகமது நிசாதின் தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது.

# கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா ஷாரிக் காரியப்பர் தெரிவு





நூருல் ஹுதா உமர்

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் முதலாவது பெண் தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி ஆரிகா ஷாரிக் காரியப்பர் தெரிவு செய்யப்பட்டார்.

கல்முனை நீதிமன்ற கட்டிடத் தொகுதியில் இடம்பெற்ற கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இடம்பெற்ற 2025/26 ம் ஆண்டுக்கான கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று இவர் தெரிவானார்.

இவர் கிழக்கு மாகாணத்திலேயே பிராந்திய சட்டத்தரணிகள் சங்கங்களின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட முதலாவது பெண் சட்டத்தரணியாக வரலாற்றில் இடம் பெறுகிறார் என்பதுடன் மேற்படி தேர்தலில் அவரை எதிர்த்து சிரேஷ்ட சட்டத்தரணிகளான யூ.எம்.நிசார் மற்றும் ஐ.எல்.எம்.றமீஸ் ஆகியோர் போட்டியிட்டனர்.

இவர் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் பழைய மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மு.கா முக்கியஸ்தர்கள் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகருடன் சந்திப்பு



எஸ். சினீஸ்கான்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் அழைப்புக்கமைய, இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் இளைப்பாறிய மேஜர் ஜெனரல் பஹீம்-உல்-அஸீஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று பாராளுமன்ற கட்டிடத்தில் இடம்பெற்றது.

இதன்போது, லாஹூர் பிராந்திய கௌரவ கொன்ஸல் ஜெனரல் யாஸின் ஜோயிஆ தலைமையில் தற்போது இலங்கை வந்துள்ள வர்த்தகத் தூது குழுவினர் வருகை தந்து, வர்த்தக துறையில் இங்கு முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடினர்.

குறிப்பாக தகவல் தொழில் நுட்பம் மற்றும் உல்லாசப் பயணத்துறை தொழிலாண்மை என்பவற்றை மையப்படுத்தியதாக நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் மற்றும் எம்.எஸ். உதுமாலெப்பை ஆகியோர் பங்கேற்றனர்.

## கிழக்கு மாகாண தொழில் முயற்சியாளர்களுக்கான
# விழிப்புணர்வுக் கருத்தரங்கு






கிழக்கு மாகாண தொழில் முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மற்றும் கண்காட்சியானது இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் இடம்பெற்றன.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜயசிங்க தலைமையில் கிழக்கு பல்கலைக்கழக ரெக்னோ பார்க் நிலையத்தில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், கிழக்கு பல்கலைக்கழக வர்த்தக துறைப் பீடாதிபதி பேராசிரியர் என்.இராஜேஸ்வரன் உள்ளிட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது உற்பத்தியாளர்கள் மற்றும் முதலீடுகளுக்கு ஆதரவு வழங்குவோரின் கண்காட்சிக் கூடங்களை அதிதிகள் பார்வையிட்டனர். அத்துடன் தொழில் முயற்சியாளர்களை ஏற்றுமதிச் சந்தையினுள் இணைத்து அவர்களை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை சர்வதேச தரத்தில் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொள்வதற்கான விழிப்புணர்வுகள் இதன் போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த வருடம் இலங்கையிலிருந்து 12 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட போதிலும், 19 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையை மாற்றுவதற்கான செயற்றிட்டங்கள் மற்றும் முயற்சியாளர்களுக்கான வங்கிக் கடன்கள் வழங்குதல், குத்தகைக்கு காணி வழங்குதல் போன்ற மேலும் பல விடயங்கள் குறித்து இதன்போது உயரதிகாரிகளால் தெளிவுபடுத்தப்பட்டன

# நிந்தவூர் தொழில் பயிற்சி நிலையத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம்!

கே.ஏ.ஹமீட்

அம்பாறை மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்தின் கீழ் பணிபுரியும் தமிழ் மொழி மூலம் போதனாசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் நிந்தவூரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




அம்பாறை மாவட்ட ஒன்றினைந்த சுதந்திர தொழில் சங்க மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் நிந்தவூர் தொழில் பயிற்சி நிலையத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தின் தொழில் பயிற்சி நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் டி.வினோதராஜாவை இடமாற்றுமாறு அம்பாறை மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்தின் கீழ் பணிபுரியும் போதனாசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அம்பாறை மாவட்டம் பிரதிப் பணிப்பாளர் தம்மீது அடக்குமுறை வைப்பதாகவும் அவர் மீது குற்றம் சுமத்தினர்.

இதுதொடர்பாக நாம் அம்பாறை மாவட்டத்தின் தொழில் பயிற்சி நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் டி.வினோதராஜாவை தொடர்பு கொண்டு வினவியபோது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றாத சில ஆசிரியர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டதால் அத்தகைய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி

எம்.எச்.எம்.சியாஜ்



புத்தளம் இந்து மத்திய கல்லூரி மற்றும் புத்தளம் மனல்குன்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் உயர் தர மாணவர்களுக்கான ஒருநாள் தலைமைத்துவ பயிற்சி செயலமர்வு புத்தளம் இந்து மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்தல் மற்றும் தலைமைத்துவ பண்பை வளர்த்தல் என்பதன் அடிப்படையில் பாடசாலை அதிபர்களின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற இச் செயலமர்வு ஸ்ரீலங்கா யுனிட்ஸ் அமைப்பின் ஏற்பாட்டில் செடோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற பயிற்சியின் வளவாளர்களாக கற்பிட்டி பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் தலைவரும் செடோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஊடக ஒருங்கிணைப்பாளர் சன்ஹீர் சஜான் மற்றும் செடோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் நிர்வாக பொறுப்பாளர் ஏ.ஆர். எம். ஹாபீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் இரு பாடசாலைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுமார் 60 மேற்பட்ட உயர்தர மாணவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.




01. அஸ்வெசும மற்றும் ஏனைய நலன்புரி சேவைகளுக்காக ஜூலை மாதம் முதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

02. வறுமையை போக்குவதற்கு விசேட வேலைத்திட்டங்கள்.

03. புதிய தேசிய தீர்வை வரி முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க திட்டம்.

04. புதிய சுங்கச் சட்டத்தை முன்வைக்க நடவடிக்கை.

05. வருமானத்தை அடிப்படையாக கொண்டு அரச காணிகள் முதலீடுகளுக்காக குத்தகைக்கு வழங்கப்படும்.

06. அரச – தனியார் கூட்டாண்மைக்கு புதிய சட்டம்.

07. தேசிய தர முகாமைத்துவ கட்டமைப்புக்காக 750 மில்லியன் ரூபா ஒடுக்கீடு.

08. கொழும்பு துறைமுகத்தின் வடக்கு – மேற்கு முனைய அபிவிருத்திகளுக்காக ஒரு மாதத்துக்குள் யோசைனைகள் கோரப்படும்.

09. பல்நோக்கு பொருள் விநியோக மத்திய நிலையமாக வெயாங்கொடையில் உள்ளக கொள்கலன் முனையம் நிர்மானிக்கப்படும்.

10. துறைமுக அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

11. கொழும்பு துறைமுகம் - பண்டாரநாயக்க சர்வசே விமான நிலையத்தில் உயர்தர ஸ்கேன் கட்டமைப்பை உருவாக்க 1000 மில்லியன் ரூபா ஒருக்கீடு.

12. இலத்திரனியல் அடையாள அட்டை விரைவில்.

13. விரைவில் இலத்திரனியல் பொருளாதார அதிகாரசபை உருவாக்கப்படும்.

14. கட்டங்கட்டமாக நாணயத்தாள் பாவனையை குறைக்க திட்டம்..

15. தொடர்பாடல் தொழில் நுட்பத்தினூடான வருடாந்த ஏற்றுமதி வருமானத்தை 5 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்கத் திட்டம்.

16. டிஜிட்டல் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய 3000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

17. சுற்றுலாதுறை உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

18. சுற்றுலாதுறை சார் இடங்களுக்கு புதிய டிஜிட்டல் முறை அறிமுகப்படுத்தப்படும்.

19. ஜப்பான் நிதியுதவியுடன் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இரண்டாவது முனையம் விரைவில் நிர்மாணிக்கப்படும்.

20. அரச அபிவிருத்தி வங்கி உருவாக்கப்படும்.

21. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதிய காப்புறுதி இரண்டரை இலட்சம் ரூபாவால் குறைப்பு.

22. எதிர்வரும் மார்ச் மாதம் முதல் சகல அதிசொகுசு வாகனங்களும் குத்தகைக்கு

23. பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வாகனம் இறக்குமதி செய்தல் மற்றும் வாகன இறக்குமதிக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு இல்லை.

24. திரிபோசா வேலைத்திட்டத்துக்காக 5000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

25. மகளிர் , சிறுவர் துஷ்பிரயோகம், மகளிர் திறன் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு வேலைத்திட்டங்களுக்காக 120 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

26. மகளிர் அபிவிருத்திக்கான கிளைகளை மேம்படுத்த 720 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

27. பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுக்காக மனிதவளம், மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் அரசாங்கத்தால் வழங்கப்படும்.

28. சுகாதார சேவைக்காக 604 பில்லியன் ரூபாவாக அதிகரிப்பு.

29. லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் நரம்பியல் நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக சர்வதேச தரம் கொண்ட சிகிச்சை நிலையமொன்றை அமைக்க 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.

30. பாடசாலை உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்காக 1000 மில்லியன் ரூபா வரையில் நிதி ஒதுக்கீடு.

31. பல்கலைக்கழக கட்டமைப்பு அபிவிருத்திக்காக 135 பில்லியன் ரூபா ஒதுக்கீடு.

32. பாலர் பாடசாலை மாணவர்களுக்காக காலை உணவுக்கான வேலைத்திட்டத்துக்கான ஒதுக்கீடு 60 ரூபாவிலிருந்து 100 ரூபாவாக அதிகரிப்பு – 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

33. பாடசாலை கட்டமைப்பை மறுசீரமைப்பு செய்து புதிய நிலையை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டத்துக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

34. புலமைபரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான மாணவர் உதவி தொகை 750 ரூபாவிலிருந்து 1500 ரூபாவாக அதிகரிப்பு- 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

35. விளையாட்டு பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த போசணை கொடுப்பனவு 5000 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவாக அதிகரிப்பு.

36. தொழில் பயிற்சி கற்கையில் ஈடுபடும் மாணவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவை 4000 ரூபாவிலிருந்து 5000 ரூபாவாக அதிகரிப்பு - 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

37. பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாபொல உதவி தொகையை 5000 ரூபாவிலிருந்து 7500 ரூபாவாக அதிகரிப்பு - பல்கலை மாணவர்களின் மாணவர் உதவி தொகை 4000 ரூபாவிலிருந்து 6500 ரூபாவாக அதிகரிப்பு. (4600 மில்லியன் ரூபா ஒதுக்கீடு)

38. உயர்தரப் பரீட்சையின் அதி சித்தியை பெறும் மாணவர்கள் வெளிநாட்டு படிப்பு மற்றும் வினைத்திறன் விருத்தி வேலைத்திட்டத்துக்காக 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

39. மேல், வடமத்திய, ஊவா, வடக்கு மாகாணங்களில் விசேட விளையாட்டு துறை அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.

40. யாழ்ப்பாணம் நூலகத்துக்கு தொழில்நுட்பம் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு- ஏனைய பகுதிகளிலுள்ள நூலகங்களுக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

41. திருத்தப்பட்ட புதிய மின்சார சட்டம் விரைவில்.

42. திருகோணமலையிலுள்ள 66 எண்ணெய் தாங்கிகளை சர்வதேச நிறுனங்களுடன் ஒன்றிணைந்து அபிவிருத்தி செய்ய திட்டம்.

43. விவசாயிகளுக்கான உர மானியத்துக்கான ஒதுக்கீடு 35000 மில்லியன் ரூபாவாக அதிகரிப்பு .

44. 2024 / 2025 ஆம் ஆண்டு பெரும்போக நெல்லை கொள்வனவு செய்ய 5000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

45. சோயா, கௌப்பி, பாசிப்பயறு, உளுந்து, மிளகாய், உருழைக்கிழங்கு போன்ற தானிய விளைச்சல்களுக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

46. பாவனையின்றி இருக்கும் காணிகளின் மீள் அபிவிருத்திக்கான ஆரம்பகட்டச் செயற்பாடுகளுக்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

47. இராஜாங்கனை, கல்லோயா, மின்னேரியா, உருவெல நீர்தேக்கங்களின் மீள் அபிவிருத்திக்காக 2000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

48. தென்னை பயிர்செய்கை அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

49. கருவா உள்ளிட்ட ஏனைய ஏற்றுமதி பயிர்களுக்கான சந்தை அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

50. அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்கான ஒதுக்கீடு 232.5 பில்லியன் ரூபாவாக அதிகரிப்பு.

51. சிறுநீரக நோயாளர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு 7500 ரூபாவிலிருந்து 10,000 ரூபா வரை அதிகரிப்பு.

52. முதியவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவை 3000 ரூபாவிலிருந்து




5000 ரூபா வரையில் அதிகரிப்பு.

53. ஆதரவின்றி இருக்கும் சிறுவர்களுக்கு 5000 ரூபா மாதாந்த கொடுப்பனவு வழங்க தீர்மானம். 2000 ரூபாவை அவர்களின் வங்கி கணக்கில் வைப்பிலிடவும் தீர்மானம் - இந்த வேலைத்திட்டத்துக்காக் 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

54. ஆதரவின்றி இருக்கும் சிறுவர்கள் திருமணம் செய்யும்போது அவர்களுக்கான வீட்டை நிர்மாணித்துக்கொள்வதற்காக ஒரு மில்லியன் ரூபா வழங்க திட்டம் - 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு..

55. இயற்கை அனர்த்தங்கள் மற்றும் விலங்குகளினால் ஏற்படும் மரணங்கள் மற்றும் உடல் உபாதைகளுக்காக வழங்கப்படும் நிவாரண தொகை 10 இலட்சம் ரூபாவாக அதிகரிப்பு.

56. புத்தாண்டு காலப்பகுதியில் லங்கா சதொச நிறுவனத்தினூடாக விசேட உணவு பொதியை வழங்குவதற்காக 1000 மில்லியன் ரூபா ஒருக்கீடு.

57. சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்பிலுள்ள ஒரு மில்லியன் ரூபாவுக்கு,சந்தையிலுள்ள வட்டி வீதங்களை விட 3 சதவீத வட்டி வீதம் வழங்கத் திட்டம் ஜூலை முதல் அமுலாகும்.

58. கொழும்பு நகருக்கு உள்நுழையும் பிரதான வீதிகளினூடாக 100 சொகுசு பஸ்களை சேவையில் ஈடுபடுத்தத் திட்டம். (கொட்டாவ - கொழும்பு, மொறட்டுவ - கொழும்பு, வத்தளை - கொழும்பு, கடவத்த - கொழும்பு) - 3000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

59. இலங்கை போக்குவரத்துச் சபையினூடாக 200 பஸ்களை சேவையில் ஈடுபடுத்தத் திட்டம்.

60. புகையிரத சேவை வினைத்திறனை அபிவிருத்தி செய்வதற்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

61. புதிய புகையிரத நிலையங்களை உருவாக்கும் வேலைத்திட்டத்துக்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

62. தம்புத்தேகம புகையிரத நிலையத்தை புனரமைப்பு செய்வதற்கான ஆரம்பகட்ட செயற்பாடுகளுக்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

63. ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் கடனை மீள் செலுத்துவதற்கான இடைக்கால செயற்பாடுகளுக்காக 20,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

64. கிராமிய வீதிகளின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக்காக 3000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

65. கிராமிய பாலங்களை அபிவிருத்தி செய்ய 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

66. வடக்கு மாகாணங்களிலுள்ள கிராமிய வீதிகள் மற்றும் பாலங்களை புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக 5000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

67. மாவட்ட மட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக மேலதிகமாக 2000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

68. இந்திய நிதியுதவியுடன் கிழக்கு மாகாணத்தில் பரந்துப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தை முன்னெடுக்க யோசனை.

69. மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்தாரத்தை மேம்படுத்துவதற்காக 7583 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

70. பெருந்தோட்ட வீட்டு அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்காக 4267 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

71. மலையக தமிழ் இளைஞர்களின் தொழில் பயிற்சி, வாழ்வாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்காக 2450 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

72. மலையக தமிழ் மாணவர்களுக்கான பாடசாலை மற்றும் நவீன வகுப்புகளுக்காக 866 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

73. பரந்தனில் இரசாயன உற்பத்திக்கென தனியான தொழில்துறை வலயத்தை அமைக்க யோசனை.

74. காலி பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டு செயலிழந்துள்ள தொழில் பூங்காவாக டெக்னோ பார்க்கை அபிவிருத்தி செய்ய 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

75. மோட்டார் வாகன உதிரிபாகங்கள் மற்றும் இறப்பர் உற்பத்திக்காக 1500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

76. கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துக்காக 5000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

77. அநுராதபுரம் போதனா வைத்தியசாலை உள்ளிட்ட ஏனைய வைத்தியசாலைகளின் கழிவு முகாமைத்துவத்துக்காக 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

78. யானை - மனித மோதல்களை குறைத்து பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக 3,300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

79. இனக்குழுக்களிடையே தேசிய நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

80. வடக்கு, கிழக்கு மக்களின் மீள்குடியேற்றம், வீட்டுவசதி, தற்போதைய தேவையின் அடிப்படையில் வீடற்ற குடும்பங்களுக்கு அத்தியாவசிய நிவாரணங்களை வழங்குவதற்காக 1,500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

81. அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புத் தொகுதிகளின் அத்தியவசிய பராமரிப்பிற்காக 1,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

82. நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாரிய நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் சமூக நீர் வழங்கல் கருத்திட்டங்களை விரைவாக நிறைவு செய்வதற்கு 20,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.

83. கிரிபாவ-எப்பாவல நீர் வழங்கல் திட்டத்தின் ஆரம்ப பணிகளை மீண்டும் தொடங்குதல் மற்றும் அந்தப் பகுதிக்கு குழாய் மூலம் நீர் வழங்குவதற்காக 1,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.

84. அரச பதவி வெற்றிடங்களுக்காக 30,000 ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள 10,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

85. அரச ஊழியர்களுக்கான ஆகக் குறைந்த மாதாந்த அடிப்படை சம்பளம் 15,750 ரூபாவால் அதிகரிப்பு - அரச ஊழியர்களின் இடர்கடன் எல்லை 400,000 ஆக அதிகரிக்கப்பு.

86. தனியார் துறையை சேர்ந்த தொழில் வழங்குநர் சங்கங்கள், தனியார் துறை தொழிலாளர்களின் ஆகக் குறைந்த சம்பளத்தை 2025 ஏப்ரலில் ரூபா 27,000 ஆகவும் 2026 இலிருந்து ரூபா 30,000 ஆகவும் அதிகரிக்க யோசனை.

87. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிப்பு.

88.அரசதுறை ஓய்வூதியத்துக்காக 10,000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

89. ஊடகவியலாளர்கள் மற்றும் கலைத்துறையுடன் தொடர்புடையவர்களுக்கு கொட்டாவ பகுதியில் வீட்டுத்திட்டம் முன்னெடுப்பு.

---------------------------------------------------

மொத்த வருவாய் மற்றும் மானியங்கள் - ரூ.4,990 பில்லியன்

மொத்த செலவீனம் - ரூ.7,190 பில்லியன்.

துண்டுவிழும் தொகை - ரூ.2,200 பில்லியன்.



sportsml77@gmail.com

# SPORTS லீடர்

## புதிய சாதனை படைத்த சுப்மன் கில்!



சாம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் அறிமுக போட்டியில் சதமடித்த நான்காவது இந்திய வீரர் என்ற சாதனையை சுப்மன் கில் படைத்துள்ளார்.

பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் அவர் குறித்த மைல்கல்லை எட்டினார். முன்னதாக இந்திய அணியின் சச்சின் டெண்டுல்கர், சிகர் தவான், மொஹமட் கை்.ப் ஆகியோர் அறிமுக போட்டியில் சதம் விளாசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தசுன் ஷானக்கவுக்கு அபாரதம்



ஒப்பந்த கடமைகளை மீறியதற்காக இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் தசுன் ஷானக்கவுக்கு 10,000 அமெரிக்க டொலர்கள் அபாரதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் டுபாய் கெப்பிடல்ஸ் அணிக்காக விளையாடுவதற்காக இலங்கையில் நடந்த முதல்தர போட்டிகளிலிருந்து வெளியேறுவதற்காக காயத்தை ஏற்படுத்தியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்-பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மருதமுனை கிரிக்கெட் சங்கத்தின் மென்பந்து சுற்றுப் போட்டியில்:

# கல்பனா அணி சம்பியன்










(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்திய 10 ஓவர் கொண்ட மருதமுனை வெற்றிக் கிண்ணம் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்வு மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இப்போட்டியின் இறுதிச் சுற்றுக்கு மருதமுனை யுனிவர்ஸ் அணியும், கல்பனா அணியும் தெரிவாகியது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கல்பனா அணியினர் 10 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுகளை இழந்து 68 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யுனிவர்ஸ் அணியினர் 10 ஓவர் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 45 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டனர். சாம்பியன் அணியாக கல்பனா அணி தெரிவானது.

மருதமுனை கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் ஏ. மனாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட பொருளாளரும் உயர்பீட உறுப்பினருமான கலீல் முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக ஆபிதா ஹென்லூம் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.என்.இஸட். றூமி, முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.சமட் ஹமீத் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வுக்கு விசேட அதிதியாக எம். ரி.வாக்கிர் அஜ்மல் கலந்து சிறப்பித்தார்.

இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகனாக கல்பனா அணி வீரர் அன்பஸ் அமானுல்லா தெரிவானதுடன் தொடரின் சிறப்பு ஆட்டக்காரருக்கான விருது இருவருக்கு வழங்கப்பட்டது. தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக கல்பனா அணியின் வீரர் எம்.ஜெ.எம்.பயாஸ் தெரிவானதுடன் சிறந்த பந்துவீச்சாளராக யுனிவர்ஸ் அணி வீரர் சர்ஜுன் தெரிவானார்.

சாம்பியன் அணியாக தெரிவு செய்யப்பட்ட மருதமுனை கல்பனா அணியினருக்கு சம்பியன் வெற்றி கிண்ணமும், காசோலையும் அதிதிகளினால் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்ட யுனிவர்ஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணமும், காசோலையும் வழங்கி வைக்கப்பட்டது

## பெங்களூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி



மகளிர் பிரீமியர் லீக் 20 ஓவர் கிரிக்கெட்டில் முதல் கட்ட ஆட்டங்கள் வதோதராவில் முடிவடைந்த நிலையில் 2-வது கட்ட லீக் ஆட்டங்கள் பெங்களூரில் இன்று தொடங்கியது.

ஒரு நாள் ஓய்வுக்கு பிறகு நடைபெறும் 7 ஆவது லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணி, நடப்பு சம்பியன் பெங்களூர் ரோயல் சேலஞ்சர்சை எதிர்கொண்டு ஆடியது. அதன்படி, மும்பை அணி 19.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்கள் எடுத்தது மும்பை அணி வெற்றிபெற்றது.